# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
# (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
## DEPOSITION OF WITNESS
## SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | சின்னம்மாள் |
| HUSBAND NAME | - | ஆர். கிருஷ்ணன் |
| VILLAGE | - | கீழ்முட்டுகூர் |
| TALUK | - | கே.வி.குப்பம் தாலுக்கா |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் A1, A3, A5 and A6 ஆஜர். எதிரிகள் 2, 4 மற்றும் 7 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1. என் பெயர் சின்னம்மாள். என் கணவர் பெயர் கிருஷ்ணன். நான் லட்சுமி நாரயணபுரத்தில் வசிக்கிறேன். என் கணவர் இரணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். எனக்கு 3 பிள்ளைகள் 2 பெண்.1 ஆண். என் பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் மகன் இரணுவத்தில் வேலை செய்கிறார். என் கணவருடன் பிறந்த மூத்த சகோதரன் தாமோதரனுக்கு ஒரு நிலம் உள்ளது. என் மாமனார் ராஜீகவுண்டர் 12 செண்ட் நிலத்தை களமாக பயன்படுத்த ஒதுக்கி கொடுத்து இருந்தார். அதில் என் கணவர் ஆலே பிளாக் கல்லில் ஒரு அறை கட்டி வைத்து

இருந்தார். ஏற்கனவே என் கணவருக்கும் அவருடைய அண்ணன் தாமேதரனுக்கு இரு சம்மந்தமாக ஒரு பிரச்சினை இருந்து வந்தது. நாங்கள் கிராம நிர்வாக அலுவரை வைத்து அளந்து கொள்ளாம் என்று இருந்தோம். தாமோதனும் அவர்களது மகன்கள் முருகன், காந்தி, பாஸ்கரன், மோகன் ராஜ் அந்த வழியாக நிலத்திற்கு போக வர இருப்பார்கள். என் கணவரும் நானும், தாமோதரனிடம் ஏன் நாங்கள் கட்டிய செட்யை இடித்தீர்கள் என்று கேட்டோம். 10.06.2020 மதியம் 2 மணிக்கு ஏன் இடித்திர்கள் என்று கேட்டோம். தாமோதரன் யார் கேட்டு செட்டை கட்டினீர் என்று தேவிடியா பையா என்று சொல்லி என் கணவரை கையில் வைத்து இருந்து கொம்பால் முதுகின் மேல் தாமோதரன் அடித்தார். முருகன் பெரிய வண்டியில் வந்து ஓங்கோத்தா தேவிடியா பையா என்று திட்டி தடியால் என் கணவரின் தலை மீது ஓங்கி, ஓங்கி அடித்தார்.

2. என் கணவர் தலையை பிடித்து கொண்டு கீழே உட்கார்ந்தார். அப்போது என் கணவரை அடிப்பதை தடுக்க நான் போன போது என்னையும் முருகன் தலை மீது கொம்பால் அடித்தார். பாஸ்கரன் காரில் நான்கு பேரோடு கொம்பு எடுத்து கொண்டு வந்தார்கள். தாமோதரன் மகன் பாஸ்கரன் முருகன் மகன் மோகன் ராஜ், சரண்ராஜ் கொம்பு எடுத்து கொண்டும், நவீன் ராஜ் கொம்பு எடுத்துக் கொண்டும் வந்து அவர்கள் என் கணவரை மாறி, மாறி அடித்தார்கள். நான் கத்தி சத்தம் போட்டேன். காந்தி பெரிய வண்டியில் வந்து கொம்பு எடுத்துக் கொண்டு வந்து தேவிடியா பையா, நீ இருந்தால் தொல்லை பண்ணி கொண்டு இருப்பாய் என்று இடது பக்க தலை மீது ஓங்கி அடித்தார். என் கணவரின் இடது பக்க கண் மீது காந்தி ஓங்கி அடித்தார். பாஸ்கரன் கையில் வைத்திருந்து கொம்பால் ஓங்கோத்தா தேவிடியா பையா நீ என்ன டார்ச்சர் கொடுக்கிறாய் என்று வலது பக்க மணிகட்டின் மீது ஓங்கி ஓங்கி அடித்தார்.

3. என் கணவர் மயங்கி கீழே விழுந்து விட்டார். மோகன் ராஜ் என் கணவரை டேய் தேவிடியா பையா நீ என்ன டார்ச்சர் கொடுக்கிறாய் என்று சொல்லி இரண்டு கால் மீது ஓங்கி ஓங்கி அடித்து

என் கணவருக்கு கால் முறிவு ஏற்பட்டு ரத்தமும் வந்தது. சரண்ராஜ் என் இரண்டு கால்கள் மீது அடித்து கால்களை உடைத்து விட்டார். நவின் ராஜ் நீ அடங்க மாட்டாயா என்று சொல்லி என் இரண்டு கை மீது அடித்து உடைத்து விடடார். காந்தி ஓங்கி நீ இருந்தால் பிரச்சினை பண்ணுகிறாய் என்று என் தலை மீது ஓங்கி அடித்தார். பாஸ்கரன் கையில் வைத்திருந்து கொம்பால் என் கணவரின் இடது கண் மீதும் வலது கை மீதும் அடித்தார். அந்த கொம்பே உடைந்து விட்டது.

4. மேற்படி ஏழு பேரும் என்னையும், என் கணவரையும் மாறி, மாறி எங்கள் இரண்டு பேரையும் அடித்தார்கள். அதன்பிறகு என் அம்மா கோவிந்தம்மாள் நிலத்தில் இருந்து ஓடி வந்து கத்தினார். மேற்படி ஏழு பேரும் வண்டி எடுத்து கொண்டு ஓடி விட்டார்கள். 10.06.2020 மாலை 5.30 மணிக்கு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னையும், என் கணவரையும் என் மகன் சத்யன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போகும் வழியிலேயே என் கணவர் இறந்து விட்டார். என் கணவருக்கு இடது தலை மற்றும் கால், கை ஆகிய இடங்களில் ரத்த காயம் ஏற்பட்டு இருந்தது. என்னையும் அடித்து கால் மற்றும் கை மீது காயம் ஏற்படுத்தியதால் நான் அரசு மருத்துவனையில் சிகிக்சை பெற்றேன்.

5.அதன்பிறகு என்னுடைய இரண்டு மகள்கள் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு வந்து என்னிடம் விசாரித்தார்கள். நான் நடந்ததை அவர்களிடம் சொன்னேன். அதன்பிறகு பனமடங்கி போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த ஒவ்வொன்றாக சொல்ல, சொல்ல அவர்கள் எழுதி கொண்டார்கள். அதை அவர்கள் என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் அவர்கள் படித்ததை சரியாக இருந்து என்று சொல்லி கைநாட்டு குத்தினேன். நான் மருத்துவமனையில் இருக்கும் போதே கைநாட்டு வைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில்

உள்ள கைரேகை தான், நான் வைத்து கைரேகை ஆகும். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.1 ஆகும்**.

6. தற்போது நான்கு எதிரிகள் ஆஜரில் இருக்கிறார்கள். எதிரிகள் தாமோதரன், காந்தி மற்றும் நவீன் ராஜ் ஆகியோர் இல்லை.

7. எதிரிகள் ஆலே பிளாக் கல் கட்டித்தை இடிக்க பயன் படுத்திய கடப்பாறை தான் தற்போது என்னிடம் காட்டப்படும் கடப்பாறை ஆகும். அந்த **கடப்பாறை சா.பொ.1 ஆகும்.** தற்போது என்னிடம் காட்டப்படும் பச்சை கலர் புடவை தான் நான் சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்து புடவையாகும் **அந்த புடவை சா.பொ.2 ஆகும்**. தற்போது என்னிடம் காட்டப்படும் பாவாடை மற்றும் ஜாக்கெட் தான் சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்த பாவாடை மற்றும் ஜாக்கெட் ஆகும். **அந்த பாவாடை சா.பொ.3 ஆகும்.** நான் அணிந்திருந்த **அந்த ஜாக்கெட் சா.பொ.4 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரங்களை உண்மையை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு)</u>**

8. எங்களுக்கும், தாமோதரனுக்கும் பாத்தியப்பட்டதாக கூறும் பொதுவான இடம் எங்கள் வீட்டிற்கும், தாமோதரன் வீட்டிற்கும் இடையில் உள்ளது. அந்த இடத்தில் பொதுவான கிணறு உள்ளது. எங்கள் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளோம். எங்களுக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட நிலம் எங்கள் வீட்டின் பின்புறம் உள்ளது. எங்கள் வீட்டில் இருந்தே எங்கள் நிலத்திற்கு போக வழி உள்ளது. எதிரி தாமோரன் அவருடைய நிலத்திற்கு அவரது வீட்டை ஒட்டியுள்ள பொதுவான இடத்தில் மூலம் தான் டிராக்டர் மற்றும் லாரி ஆகியவற்றை விவசாய தேவைக்காக எடுத்து செல்ல வேண்டும் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் போககூடாது, பொது இடத்தில் போகலாம்.

9. தாமோதரன் வீட்டை ஒட்டினார் போல் பொது வழியில் போகலாம். எங்களுக்கும் அந்த பாத்தியம் உண்டு. தாமோதரன் வீட்டை ஒட்டினார் போல் ஷெட் போட்டீர்களா என்றால் சற்று தள்ளி பொது இடத்தில் கட்டினோம். எங்கள் வீட்டிற்கும், தாமோதரன் வீட்டிற்கும் இடையில் உள்ள பகுதி பொது இடம் என்றால் சரிதான். அந்த பொது இடத்தில் தாமோதரன் வீட்டை ஒட்டினார் போல் ஷெட் கட்டினீர் என்றால் சரியல்ல. தாமோதரன் நிலத்திற்கும் செல்லும் வழியை மறித்து ஷெட் கட்டினீர் என்றால் சரியல்ல.

10. கீழ்முட்கூர் கிராமத்தில் கூட்டுறவு வங்கி உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று அந்த வங்கியின் மூலம் பசுமாடு லோன் கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் கணவர் காலையில் சாப்பிட்டு விட்டு வங்கிக்கு சென்றார் என்றால் சரிதான். வங்கிக்கு சென்று விட்டு வீட்டிற்கு வருவதற்கு முன்பே அடிப்பட்ட சம்பவம் நடந்தது என்றால் என் கணவர் வருவதற்கு முன்பே ஷெட்டை இடித்து முடித்து விட்டார்கள். தாங்கள் கணவர் வங்கியில் இருந்து வீட்டிற்கு வந்த பிறகு சம்பவம்  நடந்ததா அல்லது வருவதற்கு முன்பவாவே சம்பவம் நடந்தது என்றால் அவர் வீட்டிற்கு வருவதற்கு முன்பே சம்பவம் நடந்தது.  என் கணவர் கருப்பு கலர் ஸ்கூட்டி வாகனம் வைத்து இருந்தார்.

11. என் கணவர் அடிப்பட்ட இடத்தில் அந்த ஸ்கூட்டி வாகனம் கீழே விழுந்து விட்டதா என்றால் அடித்த போதும் என் கணவர் கீழே விழுந்து விட்டார். என் கணவர் வண்டியில் வந்து கொண்டு இருக்கும் போது பின்னால் ஓங்கி அடித்தார்கள். நான் அப்போது தான் தடுக்க சென்றேன். தங்கள்  கணவர் அடிப்பட்ட உடன்  கீழே  விழுந்து விட்டார் என்றால் சரிதான். கீழே விழுந்த பிறகு எழுந்து நின்று கேட்டார். தங்களை எத்தனை பேர் அடித்தார்கள் என்றால் ஏழு பேரும் என்னை அடித்தார்கள். எத்தனை பேர் தங்களை தலை மீது அடித்தார்கள் என்றால் காந்தி, முருகன் ஆகியோர் தலை மீது மாறி மாறி அடித்தார்கள்.

12. தாங்களை மருத்துவமனையில் பரிசோதித்து மருத்துவர் தங்களுக்கு தலையில் காயம் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டு உள்ளார் என்றால் நான் மருத்துவரிடம் காண்பித்தேன். தங்களை பரிசோதித்து மருத்துவர் சொல்வது சரியா அல்லது தாங்கள் சொல்வது சரியா என்றால் நான் சொல்வது தான் சரி. தாங்கள் மகன் சத்தியன் அவரது மாமனார் வீட்டில் அவரது மனைவியுடன் வசிக்கிறார் என்றால்  அங்கேயும் இருப்பார், எங்கள் வீட்டிலும் இருப்பார். தங்கள் மகன் எங்கு நிரந்தரமாக குடும்பத்துடன் இருப்பார் என்றால் இரண்டு இடங்களிலும் இருப்பார். சம்பவ நடந்த அன்று எங்கு தாங்கள் மகன் இருந்தார் என்றால் கடைக்கு முட்டுகூருக்கு சென்று இருந்தார்.

13. தாங்கள் அடிப்பட்ட போது  வந்து விட்டாரா அல்லது அடிப்பட்டவுடன் வந்தாரா என்றால், சம்பவம் தெரிந்து என் மகன் உடனே வந்தார். அடிப்பட்ட பிறகு போன் மூலம் தகவல் சொல்லி என் மகன் உடனே வந்தார். தாங்கள் மகன் ஆம்புலன்ஸ் ஏறுவதற்கு முன்பாகவே வந்து விட்டாரா என்றால், என் மகன் தான் கூட இருந்து ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார். தாங்கள் ஆம்புலன்ஸில் செல்வதற்கு முன்பாக பனமடங்கி போலிசார் அங்கு வந்து விட்டார் என்றால் போலிசார் அங்கு வரவில்லை, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் அங்கு வந்தார்கள்.

14. சம்பவ இடத்திற்கு தங்கள் மகன் வந்தாரா என்பது குறித்து புகார் வாக்குமுலத்திலும், போலீசார் விசாரணையிலும் தங்கள் மகன் வந்தது பற்றி கூறினீரா என்றால் சொன்னேன். தங்கள் மகன் அந்த இடத்திற்கு வரவேயில்லை என்று சொன்னால், சரியல்ல. தங்கள் இரண்டு மகள்களும் திருமணம் செய்து கொடுத்து அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். என் பெரிய மகள் பெயர் லஷ்மி, அவரது கணவருடன் பசுமாத்துார் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். அவரது வீடு தங்கள் கிராமத்தில் சுமார் 15 கி. மீட்டர் துாரம் உள்ளது என்றார்,

சரிதான். பசுமாத்தூர் கிராமத்தில் இருந்து அடுக்கம்பாறை மருத்துவமனை சுமார் 30 கி. மீட்டர் தூரம் இருக்கும் என்றால், குறைவாகவும் இருக்கும். தங்களது இரண்டாவது மகள் சரஸ்வதி பசுமாத்தூர் சேர்ந்த பி.கே.புரம் கிராமத்தில் கணவருடன் வசித்து வருகிறார் என்றால், சரிதான். அவரது வீடும் 15 கி. மீட்டர் உள்ளது என்றால், சரிதான். அவர்களுக்கு என் மகன் தகவல் சொல்லி தான் வந்தார்கள்.

15. என் மகனும் மருத்துவமனைக்கு வந்தார். என் மகன் மாலை 5.30 மணிக்கு வந்தார். தாங்கள் மகன் மருத்துவமனைக்கு வந்த விவரத்தை தங்களது வாக்குமுலத்தில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. ஷெட்டை இடித்த சம்பவமும், தங்கள் அடிப்பட்ட சம்பவமும் ஒரே நேரத்தில் தான் நடந்ததா என்றால் அல்லது வெவ்வேறு நேரத்தில் நடந்ததா என்றால் ஒரே நேரத்தில் நடந்தது. சம்பவத்தை பற்றி தாங்கள் சொல்லி தான் தங்கள் மகள்களுக்கு தெரியும் என்றால், நான் தான் போனில் சொன்னேன்.

16. சம்பவத்தின் போது எதிரிகள் வந்ததாக கூறும் வாகனங்களின் பதிவு எண்கள் அதன் தயாரிப்பு நிறுவனங்கள் போன்ற விவரங்கள் தாங்களுக்கு தெரியாது என்றால், சரிதான். நான் படிக்கவில்லை. அந்த நேரத்தில் வாகனத்தின் பதிவு எண்கள் போன்ற விவரங்கள் நான் பார்க்கவில்லை. புகார் மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். Bajaj Platina TN.23 CK.0281, Hero Honda TN.23 BD 2621, Skoda Car TN 23 BA 3040 என்ற எண்கள் மற்றும் கம்பெனி ஆகியவற்றை தாங்கள் குறிப்பிட்டு புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணை செய்த போது கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான். எனக்கு வண்டி எண்கள் தெரியாது. தாங்கள் சொல்லாது பல தகவல்கள் புகாரில் உள்ளது என்றாலும், அதை யார் சொன்னது என்று தாங்களுக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

17. மருத்துவமனைக்கு நான் மாலை 6 மணிக்கு சென்றேன். என் மகள்கள் மாலை 6.30 மணிக்கு வந்து விட்டார்கள். போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால், மாலை 7 மணிக்கு வந்து விட்டார்கள். நான் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சுமார் 1 மாதம் சிகிச்சை பெற்றேன். பிறகு காலில் ராடு வைக்க வேண்டும் என்று கூறியதால் சி.எம்.சி மருத்துமனைக்கு சென்று சிகிக்சை பெற்றேன். என்னை மருத்துவமனையில் சேர்த்து பிறகு என் கணவரின் இறுதி சடங்கில் நான் கலந்து கொள்ளவில்லை.

18. சம்பவம் நடக்கும் போது என் அம்மா கோவிந்தம்மாள் வீட்டிற்க்கு பக்கத்தில் உள்ள நிலத்தில் இருந்தார். என் தாயார் நிலத்தில் இருந்து தான் வந்தார். என் கணவர் வாகனத்தில் வரும் போது நான் என் வீட்டு அருகில் இருந்து தான் பார்த்து கொண்டு இருந்தேன். வீட்டிற்கு வெளியில் தான் இருந்தேன். எங்கள் தாயார் அவரது மகன் வீட்டில் ஊருக்குள் இருக்கின்ற வீட்டில் தான் இருப்பார் என்றால், சரியல்ல. அவர் நிரந்தர குடியிருப்பு எங்கு இருப்பார் என்றால், என்னிடம் தான் இருப்பார், என் தம்பி வீட்டிற்கு போக வர இருப்பார். தாங்கள் மகன், தங்கள் தாயாரும் தங்களுடன் இருப்பதில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கீறிர்கள் என்றாலும், சரியல்ல.

19. ஆம்புலன்ஸில் ஏறி போவதற்கு முன்பாகவே பனமடங்கி போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள் என்றால், சரியல்ல. தாங்கள் வீட்டிற்குள்ளேயே இருந்ததால் தங்கள் கணவருக்கு எவ்வாறு அடிப்பட்டது என்று தங்களுக்கு தெரியாது என்றால், சரியல்ல. தங்கள் தாயார் கோவிந்தம்மாள் அன்றைய தினம் தங்கள் வீட்டில் இல்லை

என்றாலும், அவர் மகன் வீட்டில் இருந்தார் என்றாலும், சரியல்ல. எதிரிகள் யாரும், தங்களையும், தங்கள் கணவரையும் தாக்க வில்லை என்றாலும், எதிரிகள் மீதுள்ள காழ்புணர்ச்சி மற்றும் விரோதம் காரணமாக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறீர் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.01.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

S/d. G. Radhakrishnan,

Additional District Judge(FTC)(FAC)

Vellore.